# புறப்பட்டுச் செல்லுங்கள்!

*வில்லியன் ஸ்டான்லி*

**பி**ரதானக் கட்டளையைக் கொடுக்குமுன்பாக இயேசு தமது சீடர்களை மூன்றரை ஆண்டுகள் ஆயத்தப்படுத்தினார். அவர் போகும் காலம் வந்தபோது அவர்கள் சிறகடித்து எழும்பக் கட்டளைக் கொடுத்தார். அதாவது, தான் இந்நாள் மட்டும் செய்ததைத் தொடரச் சொன்னார். பிரதானக் கட்டளையில் ஐந்து கூறுகளைக் காணலாம் — 1. போ, 2. பிரசங்கி, 3. சீடராக்கு, 4. திருமுழுக்கிடு, 5. போதி. இயேசு சென்றார், பிரசங்கித்தார், சீடராக்கினார், திருமுழுக்குக் கொடுத்தார், போதித்தார். தங்களைச் செய்யச்சொல்லிய அனைத்தையும் அவர் செய்யப் பார்த்திருந்தனர். ஆகவேதான், "எப்படி ஆண்டவரே?" என்று கேட்கவில்லை. அவர்களது முன்மாதிரியான ஆண்டவர் அவர்களை அப்பணிக்குச் சீராய்ப் பயிற்றுவித்திருந்தார். அவர்களை அனுப்பி, அவர்களது அனுபவங்களைக் கேட்டு, திருத்தங்களைக் கொடுத்து நடைமுறைப் பயிற்சி அளித்திருந்தார். அவரது தரிசனமும், பணியும் எழுபது சாதா மனிதருக்குக் கடத்தப்பட்டது. அவர்களுக்கு ஒரு முன்மாதிரியானால் நமக்கு இரண்டுண்டு — இயேசுவும் அப்போஸ்தலரும் — போதாததற்குக் கையில் வழிகாட்டும் பயிற்சிப் புத்தகமும். ஆகவே, முதலில் "போ"வைப் பார்க்கலாம். எப்படிப் போவேன்?

## *1. கீழ்ப்படிந்து போங்கள்.*

இயேசுவைப்போல் போவதே கீழ்ப்படிந்து போவதாம். இயேசு வீட்டைவிட்டு வெளியேறி ஜெபாலயங்கள், கடற்கரை, பட்டணங்கள், ஊர்கள், கிராமங்களுக்குச் சென்றார். முதல் தேவை — வீட்டை விட்டு வெளியேற உந்துவிசை. சீடரின் கீழ்ப்படிதலைக் கிரகிக்க அப்போஸ்தலர் புத்தகத்தை வாசியுங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் "போனார்கள்" என்ற பதம் உங்களை விரட்டும். ஒவ்வொரு நாளும் விசுவாசிகள் சேர்ந்து சபை வளர்ந்ததில் ஆச்சரியமென்ன? எல்லாக் கிறிஸ்தவரும் போக ஆரம்பித்தால் சபையில் இட நெருக்கடியாகும்.

"நான் **அதிகாரத்துக்குக்** கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் **போகிறான்,** மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான்" என்றார் நூற்றுக்கதிபதி (மத் 8:9). கீழ்ப்படியாமைக்கு இடமேது? இயேசு, "வானத்திலும் பூமியிலும் சகல **அதிகாரமும்** எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் **போங்கள்,**" என்றார் (28:18,19). நாம் இறைவனின் சேவகர், அவரது வேலைக்காரர். அவரது அதிகாரத்தை எதிர்க்கலாமா? உங்கள் அலுவலகத் தலைவர் உங்களைப் போகச் சொல்லும்போது காது கேட்காதது போல காலாட்டிக்கொண்டு யூட்யூபை ரசித்துக்கொண்டிருப்பீர்களா? ஆண்டவரது கட்டளையைச் சட்டை செய்யாவிடில் இப்படித்தான் அவரை அவமதிக்கிறோம்.

## *2. அன்போடு போங்கள்.*

கிறிஸ்தவர்களாகிய நாம் அயலகத்தவரைக் கண்டுகொள்வதேயில்லை. நம்மை நேசிப்பது போல அவர்களை நேசிப்பதில்லை. நாம் பரலோகம் போகவேண்டும், அவர்கள் எங்கு போனால் எனக்கென்ன என்றிருக்கிறோம். கிறிஸ்தவம் என்னும் குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டிக்கொண்டிருக்கிறோம். நமது விருந்தாளிகள் யாவரும் கிறிஸ்தவரே. கிறிஸ்தவரல்லாதவரது அழைப்புகளை ஏற்கத் தயங்குகிறோம் (யாரும் அழைக்கிறார்களா?). பாவியின் விருந்தினராகச் சென்றார் என்பதே இயேசுவின்மேல் குற்றச்சாட்டு (லூக் 19:7). நோயுற்ற ஆத்துமாக்களின் மருத்துவர் நீங்களன்றோ! வந்து சுகமாக்கும்படியாக உங்கள் நோயாளிகள் காத்திருக்கின்றனர். யூதரல்லாதவரை யூதர் வெறுத்து ஒதுக்கி வாழ்ந்தனர். யூதரல்லாதவர் தங்கள் ஆலயத்திற்கு வரவேண்டுமென்று பழைய ஏற்பாட்டு யூதர் விரும்பினர் (2 நாளா 6:32,33); ஆனால் புதிய ஏற்பாட்டு யூதரோ, தங்கள் பரிசுத்த தேவாலயம் யூதரல்லாதோரால் தீட்டுப்படும் என நம்பினர் (அப் 21:28).

உங்கள் கிறிஸ்தவரல்லாதோர் நண்பர் வட்டம் விரிவாகட்டும். முதல் எட்டு நீங்கள்தான் எடுக்க வேண்டும். ஒரு சிறு புன்னகை பாலமாகும். நட்புறவோடு பழகி வீட்டிற்கு அழையுங்கள். பெருச்சாளி போல வீட்டிற்குள்ளேயே குழிபறிக்காமல் வெளியேறி அயலகத்தவரைச் சந்தியுங்கள். "என்னால் முடியாது" என்பது சாக்குப்போக்கு. ஏன் முடியாது? ஆண்டவர் வாசல்களைத் திறப்பது கண்டு அசந்து போவீர்கள். நட்புறவு வளரட்டும். அவர்களது வேதனைகளை அறியும்போது ஜெபிக்க வாக்களியுங்கள். மெதுவாக நற்செய்தி பகிரலாம். வீட்டுக்கு வீடு வாசற்படிதானே. வலிதீர்க்கும் தைலம் உங்களிடம் உண்டே. துவக்கத்தில் தலைச்சுற்றினாலும் சரியாகி விடுவீர்கள், போங்கள்.

பின்பு அருகிலுள்ள ஒரு மருத்துவமனைக்குப் பார்வை நேரத்தில் ஒரு நண்பரோடு சென்று நோயாளிகளைச் சந்தித்து ஜெபித்து வரலாம். ஒரு சேரிக்கோ கிராமத்திற்கோச் செல்லலாம். துணியாதவர்க்குக் கனி கிடைக்காது. ஒத்திப்போடுவது புத்தியீனம். ஒரு நண்பரோடு திட்டமிட்டு உடனே புறப்படுங்கள். இறையரசு நிரம்பக் காத்திருக்கிறது (லூக் 14:2).

### *3. விசுவாசத்தோடு போங்கள்.*

போகிறவன் ''கெம்பீரத்தோடே'' திரும்பிவருவான் (சங் 126:6). ஆகவே சாதக சிந்தையோடு செல்லுங்கள். ஒரு — தாலந்து கிறிஸ்தவராயிருந்தாலும் அதைப் புதைத்துவிடாமல் செயல்படுத்துங்கள் (மத் 25:18). மக்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து இயேசு வியந்தார் (மாற் 6:6). உங்கள் அவிசுவாசத்தையும் தயக்கத்தையும் குறித்து வியக்கிறாரோ? "இறைவன் என்னைப் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். நானோ நன்மை செய்கிறவனாயும் குணமாக்குகிறவனாயும் சுற்றித்திரியவில்லை" (அப் 10:38) என்போமா? வேண்டாம் நண்பரே, வேண்டாம். "எங்களுக்கு வந்து உதவி செய்யும்'' என்று மக்கள் கூப்பிடுகின்றனர் (16:9). அழைக்கப்பட்டபோது விசுவாசத்தினாலே ஆபிரகாம் கீழ்ப்படிந்து புறப்பட்டுப் போனார் (எபி 11:8).அந்த விசுவாசம் சாதித்ததைப் பாருங்கள்! உங்கள் மனது குழம்பி, கான்கிரீட் போல நிரந்தரமாக இறுகிப்போயிற்றோ? கடவுள் கையில் கொடுத்தால் அதை உடைத்து மென்மையாக்குவாரே. "உண்மைக்கு எதிரி, யோசித்து திட்டமிட்டு சொல்லப்படும் பச்சைப் பொய்யல்ல; ஆனால் விடாமல் நச்சரிக்கும் மாய்மால வார்த்தைகளே" என்றார் முன்னாள் அமெரிக்க அதிபர் ஜான் F. கென்னடி. இறைவனின் உண்மையை நம்புவதை விட்டு தனது பொய்களைப் பற்றிக்கொள்ளப் பிசாசு ஏய்த்துவிடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

பொழுது புலர்ந்தது. இரவெல்லாம் ஒன்றும் பிடிக்காமல் ஏமாற்றத்துடனும் களைப்புடனும் சீமோன் வலைகளை அலசிக்கொண்டிருக்கிறார். காலை மீன் சந்தைக்குக் கொண்டுபோக ஒன்றுமில்லை. இப்போ, மீன்பிடித் தொழிலின் ஆவன்னா அஃன்னா தெரியாத பிரசங்கி ஒருவர் வந்து, ''ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்'' என்கிறார். அதற்கு சீமோன்: "ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்," என்றார் (லூக் 5:1-7). அதுவன்றோ விசுவாசம். அவரது கீழ்ப்படிதலின் விளைவை அறிவோம். ஆம், நமக்குப் பயிற்சி இல்லை, நாம் பயங்காளிகள், திக்குவாயர், நாணிக்கோணுபவர், **ஆகிலும்** அவர் "போங்கள்" என்றதால் விசுவாசித்துப் போவோம். ஆம், பலமுறை நமது மனித புத்தியும் அனுபவமும் இது சரிவராது என்று சொல்லும். **ஆகிலும்** அவர் சொல்வதால் அவர் சொன்னதைச் செய்வோம். அப்பொழுது மட்டுமே அற்புதத்தைக் காணலாம்.

### *4. தியாகத்தோடு போங்கள்.*

இயேசுவைப் பின்பற்ற விரும்பின மூவரில் ஒருவர் முக்கிய அடக்க ஆராதனை ஒன்றிற்குச் செல்ல விரும்பினார்; இன்னொருவர் போகுமுன் பிரிவுஉபசார விருந்து வைக்க விரும்பினார்; மற்றொருவர் தன்னைக் குறித்து முழு நிச்சயமாயிருந்தார். தமது நாடோடி வாழ்க்கைக்கு உடன்பட்டால் செய்ய வேண்டியிருக்கும் தியாகத்தை இயேசு அழுத்திக் கூறினார் (லூக் 9:57-62). போக விரும்பும் சீடருக்

குக் கூட தியாகமென்னும் வார்த்தை வேம்பாய்க் கசக்கிறது. தேவையற்றவை மனதை நிரப்பியிருக் குமானால் வழியை முள்வேலி அடைக்கும். ஆண் டவர் விடச் சொல்வதை விடாமல் முன்னேற முடி யாது. அவர்களது சாக்குப்போக்குகளுக்கு வளைந்து கொடுக்காமல் இயேசு உறுதியாய் நின்றார்.

போவது கடினமான வேலை. நல்ல மேய்ப்பன் ஒரு ஆட்டைத் தேடி மூச்சுவாங்க மலையேறினார். இடுப்பில் கைகளை வைத்து மலையடிவாரத்தில் நின்று ஒரு குட்டி ஆட்டிற்காக இவ்வளவு சிரமம் தேவையா எனத் தயங்கவில்லை (மத் 18:12). "என் ஆடுகள் சகல மலைகளிலும் உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு, பூமியின் மீதெங்கும் சிதறித் திரிகிறது; விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிற வனும் இல்லை" (எசே 34:6). தொண்ணூற்றொன் பது ஆடுகளை "மலைகளில்" விட்டுப் போய்த் தேடி னான். "கண்டுபிடிக்குமட்டும்" தேடினான் (லூக் 15:4). ''இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா வின் சித்தமல்ல" (மத் 18:14). ஆம் சில வேளைகளில் அலையும் ஆட்டைக் கண்டுபிடிக்க நல்ல ஆடு களை விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். ஓடிப்போன பிள்ளையைக் கொண்டுவருமட்டும் எள்ளளவும் சோர்ந்துபோகக் கூடாது. உளி படாத கல் சிலையாவதில்லை, உழைப்பில்லாத கனவு நினைவாவதில்லை. பலன் காணுமட்டும் முன்செல்ல வேண்டும். காலிக் கையோடு திரும்புபவர் சீக்கிரம் சோர்புற்றவர். சிக்னலிலும் சிறிது நேரம் பொறுமை யாகக் காத்திருந்தால் போதும், தானாக வழி பிறக் கும். ஆத்தும ஆதாயம் பழக்கமாக வேண்டும்.

இன்றையத் தலைமுறையினர் நோகாமல் பய ணம் போகிற சுகவாசிகள். முதல் மகன் ஏன் போக மறுத்தான்? திராட்சைத் தோட்ட வேலை முது கொடிக்கும், வெயில் கொளுத்தும் என்றறிவான். இருந்தாலும் துணிந்து சென்றான். அடுத்தவனுக் குப் போக மனமிருந்தும் நேரம், சக்தி, வலியைக் கணக்கிட்டுப் பின்வாங்கினான். தியாகம் செய்த வனே இறைச்சித்தம் செய்தவன் (மத் 21:28-31). பரம பிதாவினிடத்தில், "போகிறேன் ஐயா," என்று வாக்களித்துவிட்டுச் செலவைக் கணக்குப்பண்ணிக் கொண்டிருப்பீர்களானால், இன்றே மனம் வருந்திச் செல்லுங்கள். இறைவன் யாருக்கும் கடன்பட்ட வரல்ல. உங்கள் தியாகத்திற்குப் பலாபலன் உண்டு. ஒரு நண்பரைக் கண்டுபிடித்து 'சீக்கிரமாய்' தெருக்களுக்கும், வீதிகளுக்கும், நால்வழிச் சாலைகளுக்கும் வேலிகளருகிலும் செல்லுங்கள் (லூக் 14:21,23).

### *5. கனிவோடு போங்கள்.*

நல்ல சமாரியனாயிருங்கள் (லூக் 10:30-37). அன்றாடம் வயிற்றைக் கழுவும் காயப்பட்டோர் நம்மைச் சுற்றிலும் உண்டே. உங்கள் உள்ளத்தில் தூங்கிக் கிடக்கும் நற்செய்தியே அவர்களது எதிர் கால மகிமை. உறங்கும் உள்ளத்தைத் தட்டி எழுப்பி தொற்காளாகுங்கள் (அப் 9:36-42). கனிவு கையைக் கடிக்கும்தான். செலவு செய்யத் தயங் காதீர். முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியின் மாதிரிகளாய் நாம் தியாகச் செம்மல்களாவோம். நீங்கள் கொடுக்கும் ஒரு ரூபாய்காக மகிழ்வோடு நீங்கள் சொல்வதைக் கேட்பர். செல்லாக் காசுக ளாய்க் கருதப்பட்டவர்களையெல்லாம் பணக்கார நோட்டுகளாய் மாற்றுங்கள். வறியவர் மத்தியில் ஊழியம் வற்றாதது; ஏனெனில் அவர்கள் எதிர்த்துப் பேச மாட்டார். ஒருவரிடம் துவங்கின அன்னை தெர சாவின் ஊழியம் இன்று கரைபுரண்டு ஓடுகிறது. "அன்பின் உருவம் என்ன? பிறருக்கு உதவி செய்ய அதற்குக் கரங்களுண்டு. எளியவர், தேவையிலுள் ளோரிடம் ஓட அதற்குக் கால்களுண்டு. துயரத்தையும் தேவையையும் காண அதற்குக் கண்களுண்டு. மக் களின் பெருமூச்சுகளையும் அழுகையையும் கேட்க அதற்குக் காதுகளுண்டு. இதுதான் அன்பின் உரு வம்," என்றார் பரிசுத்த அகஸ்டின். "யாருக்கும் வேண் டாதவராய் இருத்தல்தான் மிகப் பெரும் நோய்," என் றார் அன்னை தெரசா. அன்னாருக்கு வேண்டியவ ராகுங்கள். துலைந்தவரைக் கண்டு இயேசு மன துருகினார் (மத் 14:14).

### *6. தைரியமாய்ப் போங்கள்.*

இயேசு சொன்னார், "ஆடுகளை ஓநாய்களுக் குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங் களை அனுப்புகிறேன்... பயப்படாதிருங்கள்... பயப் பட வேண்டாம்... பயப்படாதிருங்கள்'' (மத் 10:16,26,28,31). ஓநாய்களுக்குள்ளே ஆடுகள்

பயமின்றி எப்படிச் செல்லும்? மேய்ப்பன் கூடவந்தால் அமர்க்களமாகச் செல்லும், ஆகவேதான் இயேசு, “போங்கள்... உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” என்றார். மத்தேயு அதற்கு “ஆமென்” சொல்கிறார் (மத் 28:19,20). நானும் “ஆமென்” சொல்கிறேன். நீங்களும் “ஆமென்” சொல்லிப் புறப்படுங்கள். பயம் உங்கள் குரல்வளையைக் குதற வேண்டாம். காற்றில் கரைந்துவிடும் கற்பூரமாகிவிடக் கூடாது நாம்.

எங்கள் தற்போதைய ஊழியத்தில் ஒருநாள் சிலர் மோட்டார் பைக்கில் வழிமறித்து வெளியேறும்படி மிரட்டினர். கவலையுடன் வேறு இடத்திற்குச் சென்றோம். அங்கு ஒரு ஆசிரியை, வீட்டைத் திறந்து கொடுக்கவே அங்கு ஊழியம் மலர்ந்தது. அங்கும் சிலர் எங்களை பைக்கில் வழிமறித்து, திட்டி, அடுத்த வாரம் என்ன நடக்கிறது என்று பாருங்கள், என்று மிரட்டிச் சென்றனர். அடுத்த வாரம் பயத்துடன் சென்றோம், யாருமில்லை. அவர்கள் டீச்சரின் பழைய மாணவர் என்று கேள்விப்பட்டோம். அங்குள்ள பலரும் டீச்சரிடம் படித்தவர்கள் ஆதலால், “டீச்சர் வீடு” என்றதும் வாயை மூடிக்கொள்கின்றனர். இது கர்த்தர் செய்த அற்புதம். அற்புதங்களை எதிர்பாருங்கள், தடைகளைத் தாண்டிச் செல்லுங்கள். சுயபெருமையை விழுங்கித்தான் செல்ல வேண்டும். இப்படி அனுபவங்கள் நம்மைப் பலத்திலிருந்து பலத்திற்குக் கொண்டுச் செல்லும். சிலர் என்னைத் திட்டியிருக்கின்றனர். ஆனால் இதுவரை என் முகத்தில் துப்பினதுமில்லை வலது கன்னத்தில் அறைந்ததும் இல்லை. வெட்ட வெட்டத் தளிர்க்கும் முருங்கை போல, பறிக்கப் பறிக்கப் பூக்கும் முல்லைப் போல தளராமல் முன் செல்வோம்.

மட்டுமல்ல, கிறிஸ்தவர்களும் நம்மை உற்சாகமிழக்கச் செய்வார்கள். இவர்கள் வாயிலேயே குதிரை வண்டி ஓட்டுபவர்கள். பிறரது கருத்தின்படி தீர்மானிக்காதீர்கள். தடுமாறித் தவறு செய்தாலும் உங்களை நம்பி முன்னேறுங்கள். புதிய யோசனைகளைச் செயல்படுத்தத் தயங்காதீர். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் உறுதுணையாளர் திரு. வில்சன் (80), ஆயர்களை அணுகி சபையாரைச் சவாலிட ஐந்து நிமிடம் கேட்கலாமே என சிந்தித்தார். அனுமதி கிடைத்தால் கட்டுக்கட்டாக நற்செய்திப் பொட்டலங்களோடு செல்வார். ஒரு பொட்டலம் வாங்கி ஒரு கிறிஸ்தவரல்லாதவருக்குக் கொடுக்க உற்சாகமூட்டுவார். ஆராதனை இறுதியில் ஒன்றல்ல, பல பொட்டலங்களையும் ஆசீர்வாதப் புத்தகங்களையும் சபையார் வாங்கிச் செல்கின்றனர். பிரசங்கிக்க வாசல்கள் அவருக்குத் திறக்க, அவரது மாவட்டத்தில் நற்செய்தி வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அவரது முன்னேற்றம் மூக்கில் விரல் வைக்கச் செய்கிறது. உலகம் சுற்றும் ஊழியத்தை மறந்துவிடுங்கள். மூலையில் எரியும் மெழுகுவர்த்தி பல மெழுகுவர்த்திகளைப் பற்றவைக்கும். இறைவன் நம்மோடிருந்தால் நமக்கு எதிராக நிற்பவர் யார்?

பயப்படுகிறவன், இல்லாத சிங்கத்திற்குப் பயப்படுவான். பலர் நொண்டிச் சாக்கு சொன்னாலும் மனமுண்டானால் மார்க்கமுண்டு என்றறிவர். உங்களுக்குப் பெரும் தடை நீங்கள்தான். பிசாசு தரும் கலக்கங்களை மேற்கொண்டீர்களானால் பிறகு புல்டோசர் போல் முன்செல்வீர்கள். கார் எங்கு நின்று போகிறதோ அங்குதான் ஓட்டுனரின் சாமர்த்தியம் வெளியாகும்.

பணி செய்வோருக்குப் பல வாய்ப்புகள் உண்டு. வழியிலேயே பலரோடு புன்னகைத்துப் பேசி விசாரித்துப் பழகலாம். மருத்துவமனை, அலுவலகம் மற்றும் பணித்தளங்களில் எல்லாரோடும் சிநேகமாயிருந்தால் வாசல்கள் எங்கும் திறக்கும். என் நண்பர் ஒருவர் தனது நோயாளி ஒவ்வொருவருக்கும் கைப்பிரதி கொடுத்து அனுப்புகிறார்.

வீடு சந்திப்பு பயத்தைக் கொடுத்தாலும் பலா பலன் மிகுதி. இருவராகச் சென்று ஒவ்வொரு வீட்டிற்கும் பரிசுப்பொட்டலமாக ஒரு மாற்கு நற்செய்தி நூலைக் கொடுக்கலாம். சாட்சிகள் பெருகும். சீக்கிரம் சோர்ந்துவிடாமல் அயராது செல்லுங்கள். இலவச சிறு புத்தகங்களுக்கு 89036 08300 வைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## *7. ஜெபத்தோடு போங்கள்.*

ஜெபத்தின் வல்லமையைக் குறைத்துச் சொல்ல முடியாது. பாதுகாக்கும் கவசமது. திருத்தூதுவர் பயமுறுத்தப்பட்டபோது விசுவாசிகள், “ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு” ஜெபித்தனர். “அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடி

யிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள்" (அப் 4:18-31). ஆம், நாம் பதறிக் கூப்பிடும்போது தேவன் கேட்டு பரிசுத்த ஆவியினால் நம்மை நிரப்பி தைரியப்படுத்துகிறார். கைபேசி இல்லாத அந்நாட்களில் அவர்கள் டி.எஸ்.பி யையா கூப்பிட முடியும், இறைவனைத்தான் கூப்பிடலாம்! ஆத்துமாக்களைக் **கேளுங்கள்,** கர்த்தர் ஆத்துமாக்களைக் கொடுப்பார்; தொலைந்தோரைத் **தேடுங்கள்,** கண்டடைவீர்கள்; அடைபட்ட இதயங்களைத் **தட்டுங்கள்,** அவை நிச்சயமாய்த் திறக்கும்.

ஜெபக்குழுக்கள் வாரமொருமுறையாவது சந்திப்பு ஊழியத்தில் ஈடுபடவேண்டும். வலது இடதாக தலையசைப்போரை விடுங்கள். மேலும் கீழும் தலையசைப்போர் ஓரிருவர் இருந்தால் போதும். புறப்பட்டுச் செல்லுங்கள். "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப் 8:4). கடினம்தான் ஆனால் கனியுண்டு. உங்களை உற்சாகப்படுத்திக்கொண்ட பிறகு ஒரு சிறு குழுவை ஊக்குவியுங்கள். கைகோர்த்தால் மலைகளையும் அசைக்கலாம். "என்னுடைய இராஜ்யம் வருவதாக," என்றல்ல, "உம்முடைய இராஜ்யம் வருவதாக," என்றே ஜெபியுங்கள்.

ஜெபமின்றி செல்வது துப்பாக்கியின்றி யுத்தத்திற்குச் செல்வதாகும். நாமே காயப்பட ஏதுவாகும். ஜெபிக்கும்போது கர்த்தர் நம் பட்சமாய் செயல்படுகிறார். ஜெபம் நம்மைப் பலப்படுத்தி தைரியமூட்டுகிறது. அந்த எழுபது பேரை ஜெபித்துச் செல்லச் சொன்னார் இயேசு (லூக் 10:1-3). விளைவு — சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுந்தான் (வச 18). "உம்முடைய அரசு வருவதாக," என்று ஜெபிக்க இயேசு சீடருக்குக் கற்பித்தார் (11:2). விண்ணரசு இம்மண்ணிற்கு வர நாம் ஜெபித்து பணிசெய்ய வேண்டும், பணிசெய்து ஜெபிக்க வேண்டும். என்னதான் இருந்தாலும் உங்களுக்கு இருள்சூழும் நாட்கள் இராமல் போகாது. தூசியை உதறிவிட்டுப் புறப்பட்டு விடுங்கள்.

### *8. ஆயத்தமாய் விழிப்புடன் போங்கள்.*

யோவான் 3:16ஐ மனனம் செய்து போங்கள். முழு நற்செய்தியும் அதில் உண்டு. மற்றும் சில தேவையான வசனங்களையும் மனனம் செய்யலாம். இரட்சிப்பு உண்டாவதற்கு அதுவே தேவபெலன் (ரோ 1:16). ஜெபம் துப்பாக்கியானால் நற்செய்தி தோட்டா. இரட்சிப்பது உங்கள் வேலையல்ல, இறைவனது வேலை. நற்செய்தியை அறிவிப்பதே உங்கள் வேலை. உங்களால் முடிந்ததை நீங்கள் செய்தால் பிறவற்றை இறைவன் பார்த்துக்கொள்வார். நல்லக் கைப்பிரதிகள், சிறு புத்தகங்கள் கொண்டுச் செல்லுங்கள். அவிசுவாசிகளுக்குச் சிறந்தது மாற்கு நற்செய்தி நூல்.

எனக்கு நேரம், காலம் கிடையாது. போகுமிடமெல்லாம் புத்தகங்கள் எடுத்துச் செல்வேன். யாரிடமும் பேசத் தயங்கமாட்டேன். பொதுவாக கண்ணியமாகக் கேட்டு புத்தகம் வாங்கிக்கொள்வர். ஒரு சிலர் சினந்திடுவர். ஹோட்டலுக்கு வெளியே நிற்கும் செக்யூரிட்டியிடம் பேசுவேன். அவர்களைக் குறிவைத்துத் தேடாவிட்டால் காணமாட்டோம். ஆகவே விழிப்புடன் யாரைப் பிடிக்கலாமென துடிப்புடன் செல்லவேண்டும். உணவு பரிமாறுபவர்க்கும் புத்தகம் கொடுப்பேன். சூப்பர் மார்க்கெட்டுகள் தூங்கினால் பணியாளர்களிடம் பேசுவேன். ஒருமுறை அப்படி ஆறு பெண்கள் அங்கேயே மண்டியிட்டு ஜெபிக்கக் கோரினர். நற்செய்தி அறிவித்து ஜெபித்தேன். பெரும் கடைகளில் சிலவேளை தங்கள் இடத்தை விட்டு ஊழியர் புத்தகம் வாங்க ஓடி வருவர். சில நிறுவனங்களில் அனுமதி வாங்கி சிறு முன்னுரைக்குப் பின்னர் யாவருக்கும் கிதியோன் புதிய ஏற்பாடு கொடுப்பேன். சமீபத்தில், ஒரு மருத்துவமனை லிஃப்டில் என்னிடமிருந்த ஐந்து புத்தகங்களைக் கொடுத்தேன். மறுநாள் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த கணவரைக் காணச் சென்றபோது வழிதவறி வேறு பகுதிக்குச் சென்றுவிட்டேன். இரண்டு வாலிபப் பெண்கள் ஓடி வந்து, "நேற்று லிஃப்டில் புத்தகம் கொடுத்தது நீங்களா?" என்றனர். "ஆம்," என்றேன். "அப்பாடி, உங்களைத் திரும்பப் பார்ப்பேனா என்று இரவெல்லாம் கவலை. நேற்று புத்தகம் கிடைக்கவில்லை. எனக்கு இயேசு வேண்டும்," என்றாள் ஒருத்தி. நற்செய்தி கூறி புத்தகம் கொடுத்தேன். இப்படி சில மெய்சிலிர்ப்புகளை அனுபவித்திருக்கிறேன். ஆனால் விசுவாசம் தனிமையான இடமாகலாம் — எல்லாரும் இருக்கும்போது நீங்

கள் மட்டும் செய்யும் ஒரு தயக்கம், ஒரு அவலம்! எப்படியானாலும் எனக்குக் கவலையில்லை. வங்கிகளிலும் கொடுக்கிறேன். ஆனால் ஞானமாய் நடந்துகொண்டு சரியான தருணத்திற்காய்க் காத்திருப்பேன். பெருமைக்காக அல்ல, உங்களை உற்சாகப்படுத்தவும் சில ஐடியாக்கள் கொடுக்கவுமே இவற்றைப் பகிர்கிறேன். ஊழியம் செய்ய வெளியே செல்கிறோம்; ஆனால் வெளியே செல்லும் போதும் ஊழியம் செய்யலாம்.

ஒரு நாள் ரோமர் 10:13 வாசித்துக் கொண்டிருந்தேன். “கர்த்தருடைய பெயரைக் கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்” (ஆங்கிலம் காண்க). அடுத்தே, “அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைக் கூப்பிடுவார்கள்?...” என்றிருக்கிறது. இது எனக்குப் புரிந்த என்னுடைய மொழிபெயர்ப்பு! நற்செய்தி எத்தனை எளிதானது, அதைப் பிறருக்கு அறிவிக்க நாம் போக மாட்டேங்கிறோமே என வியப்புற்றேன்! பாவிகள் ஒருமுறையாவது நற்செய்தியைக் கேட்காமல் நரகத்திற்குப் போய்விட விட்டுவிடாதீர்கள். இறைவன் முன்னிலையில் அவர்கள் உங்களைக் குற்றஞ்சாட்டுவர். உங்கள் கைகளில் படிந்துள்ள இரத்தக் கறையைப் பாருங்கள். மூழ்குபவனைத் தூக்க நீங்கள் ஓடாவிட்டால், அது பாவமன்றோ. நன்மையைச் செய்யாமல் விட்ட தினசரி பாவமன்றோ அது. போங்கள்! நாம் போய்க் கனிகொடுக்கும்படி இயேசு நம்மை நியமித்திருக்கிறார் (யோவா 15:16). போகாமல் கனி கொடுக்க முடியாது. நேற்று செய்திருக்க வேண்டிய வேலை இது, ஆனாலும் பிந்திப்போகவில்லை. போராடாமல் வேடிக்கைப் பார்ப்பவர்களைவிட போராடித் தோல்விகளைச் சந்தித்தவர்களே வெற்றி வீரர். நீங்கள் கீழ்ப்படிந்து ஒரு எட்டு எடுத்து வைத்தாலும் அது உங்கள் இருண்ட வானத்தில் எண்ணிமாளாத நட்சத்திரங்களைத் தெளிக்கும். துக்கங்களை மறப்பீர்கள். பதக்கம் பெற்றதுபோல் உணர்வீர்கள். “ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்” (நீதி 11:30). ஆம், “ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்” (தானி 12:3). ஆமென்! ■

(www.lilianstanley.com)